# கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# பெறுகை அறிவித்தல்

**2022ஆம் ஆண்டில் பாடசாலை பாடப்புத்தகங்களை போக்குவரத்து செய்தல்**

கல்வி வெளியீட்டுத் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் கீழ்க்குறிப்பிடும் காரியத்தின் பொருட்டு மேல் மாகாணத்தை வதிவிடமாகக் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து 2021-09-28ம் திகதி வரை முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

01. பாடசாலை பாடப்புத்தகங்களின் போக்குவரத்து – 2022 கேள்வி இல. கவெதி/அ08/02/போக்குவரத்து/2021

02. மேற்குறிப்பிட்ட கேள்விக்கான விலைமனுக்கள் 2021-09-07ஆம் திகதி முதல் 2021-09-27ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும் என்பதுடன் மீளளிக்கப்படாத 3000.00 ரூபாவை பத்தரமுல்லை, பெலவத்த, ''இசுறுபாய''வில் அமைந்துள்ள கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் பெயரில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் கேள்வி ஆவணங்களில் மாத்திரமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

I. மீளளிக்கப்படாத 3,000.00 ரூபா கட்டணத்தை கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் பெயருக்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு

II. பின்பக்கக் கதவுகளை தாழிட்டு மூடக்கூடியவாறு முழுமையாக மூடப்பட்ட கீழ்க் குறிப்பிடும் வகையிலான கன ரக வகுப்பைக் கொண்ட லொறி அல்லது வேன் வாகனங்களுக்கான உரிமையை உறுதி செய்வதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ் (புகைப்படப் பிரதியுடன்)

| | |
|---|---|
| 4.2 தொன் அல்லது அதற்கு மேற்பட்ட நிகர நிறை கொண்ட லொறி | குறைந்தபட்சம் ஐந்து லொறிகளின் உரிமையை போக்குவரத்துப் நிறுவனத்தின் பெயருக்கு அல்லது போக்குவரத்து நிறுவனத்தின் உரிமையாளரின் பெயரில் இருத்தல் வேண்டும். |
| 4.2 முதல் 2.5 தொன் வரையான நிகர நிறை கொண்ட லொறி | குறைந்தபட்சம் ஐந்து லொறிகளின் உரிமையை போக்குவரத்துப் நிறுவனத்தின் பெயருக்கு அல்லது போக்குவரத்து நிறுவனத்தின் உரிமையாளரின் பெயரில் இருத்தல் வேண்டும். |
| 2.5 தொன்னுக்குக் குறைந்த நிகர நிறை கொண்ட லொறி | குறைந்தபட்சம் மூன்று லொறிகளின் உரிமையை போக்குவரத்துப் நிறுவனத்தின் பெயருக்கு அல்லது போக்குவரத்து நிறுவனத்தின் உரிமையாளரின் பெயரில் இருத்தல் வேண்டும். |

III. போக்குவரத்து வர்த்தகமொன்றைக் கொண்டு நடாத்துவதாக வர்த்தகத்தைக் கொண்டு நடாத்தும் அதிகாரப் பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது கம்பனி பதிவுச் சான்றிதழ் (புகைப்படப் பிரதியுடன்)

04. முத்திரை பொறிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை 2021-09-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பத்தரமுல்லை, பெலவத்தை, ''இசுறுபாய'', 6ஆம் மாடியில் அமைந்துள்ள கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தலைமைக் கணக்காளர் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அல்லது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுறுபாய, பெலவத்த, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கலாம். (கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2022ஆம் வருடத்திற்கான பாடசாலை பாடப் புத்தக போக்குவரத்து'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.) கேள்வி ஆவணங்களை இரு பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என இரு வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரை பொறித்து பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரை பொறித்து சமர்ப்பித்தல் வேண்டும்.

05. 2021-09-28ஆம் திகதி மு.ப. 10.05 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே கேள்விகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதி கலந்துகொள்ளலாம்.

06. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தலைமைக் கணக்காளர் அலுவலகத்தில் 2021-09-07ஆம் திகதி முதல் 2021-09-27ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

07. மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**011-2784815 - கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்**

**011-2787515 - பிரதான கணக்காளர்**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,**